# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2403/22 - 2024 සැප්තැම්බර් මස 25 වැනි බදාදා - 2024.09.25

*2403/22 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 25 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**பாராளுமன்ற பொதுத் தேர்தல் - 2024**

*1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 16 ஆம் பிரிவின் கீழ் சுயேச்சைக் குழுக்களினால் வைப்புப் பணம் வைப்பிலிடுதலும் அந்தந்த தேர்தல் மாவட்டத்திற்கு அரசியற் கட்சிகள் அல்லது சுயேச்சைக் குழுக்களினால் பெயர்குறிக்க வேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கையும்*

மேற்கூறப்பட்ட தேர்தலில், தேர்தல் மாவட்டங்களுக்காக தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை, பெயர்குறித்த நியமனப்பத்திரம் ஒன்றின் மூலம் பெயர்குறிக்க வேண்டியுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை மற்றும் சுயேச்சைக் குழுவொன்றினால் வைப்பிலிட வேண்டிய வைப்புப் பணம் என்பன கீழேயுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது. அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளினால் வைப்புப் பணம் வைப்பிலிட வேண்டியதில்லை.

**அட்டவணை**

| *தேர்தல் மாவட்டத்தின் பெயர்* | *தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை* | *பெயர்குறித்த நியமனப்பத்திரமொன்றில் உட்சேர்க்கப்பட வேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கை* | *சுயேச்சைக் குழுவொன்றினால் வைப்பிலிட வேண்டிய வைப்புப் பணம்* |
|---|---|---|---|
| 1 - கொழும்பு | 18 | 21 | ரூபா 42,000 |
| 2 - கம்பஹா | 19 | 22 | ரூபா 44,000 |
| 3 - களுத்துறை | 11 | 14 | ரூபா 28,000 |


1A - EPG 6885 — 104 (2024/09)


*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

| *தேர்தல் மாவட்டத்தின் பெயர்* | *தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை* | *பெயர்குறித்த நியமனப்பத்திரமொன்றில் உட்சேர்க்கப்பட வேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கை* | *சுயேச்சைக் குழுவொன்றினால் வைப்பிலிட வேண்டிய வைப்புப் பணம்* |
|---|---|---|---|
| 4 - மஹநுவர | 12 | 15 | ரூபா 30,000 |
| 5 - மாத்தளை | 05 | 08 | ரூபா 16,000 |
| 6 - நுவரெலியா | 08 | 11 | ரூபா 22,000 |
| 7 - காலி | 09 | 12 | ரூபா 24,000 |
| 8 - மாத்தறை | 07 | 10 | ரூபா 20,000 |
| 9 - அம்பாந்தோட்டை | 07 | 10 | ரூபா 20,000 |
| 10 - யாழ்ப்பாணம் | 06 | 09 | ரூபா 18,000 |
| 11 - வன்னி | 06 | 09 | ரூபா 18,000 |
| 12 - மட்டக்களப்பு | 05 | 08 | ரூபா 16,000 |
| 13 - திகாமடுல்ல | 07 | 10 | ரூபா 20,000 |
| 14 - திருகோணமலை | 04 | 07 | ரூபா 14,000 |
| 15 - குருநாகல் | 15 | 18 | ரூபா 36,000 |
| 16 - புத்தளம் | 08 | 11 | ரூபா 22,000 |
| 17 - அநுராதபுரம் | 09 | 12 | ரூபா 24,000 |
| 18 - பொலன்னறுவை | 05 | 08 | ரூபா 16,000 |
| 19 - பதுளை | 09 | 12 | ரூபா 24,000 |
| 20 - மொணராகலை | 06 | 09 | ரூபா 18,000 |
| 21 - இரத்தினபுரி | 11 | 14 | ரூபா 28,000 |
| 22 - கேகாலை | 09 | 12 | ரூபா 24,000 |

02. யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய நிருவாக மாவட்டங்களுக்குரிய யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலர், யாழ்ப்பாண அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர் ஆவார். மன்னார், வவுனியா மற்றும் முல்லைத்தீவு ஆகிய நிருவாக மாவட்டங்களுக்குரிய வன்னி தேர்தல் மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலர், வவுனியா மாவட்டத்தின் அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர் ஆவார். திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலர், அம்பாறை மாவட்டத்தின் அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர் ஆவார். ஏனைய அந்தந்த நிருவாக மாவட்டங்களுக்குரிய தேர்தல் மாவட்டங்களின் அரசாங்க அதிபர்கள்/மாவட்டச் செயலாளர்கள் அந்தந்த தேர்தல் மாவட்டங்களின் தெரிவத்தாட்சி அலுவலர்களாவார்கள்.

03. வைப்புப் பணம் வைப்பிலிடுதல், பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் தேர்தலை நடாத்தும்படிக்கான நாட்கள் குறிக்கப்பட்ட கட்டளை வெளியிடப்பட்ட நாளிலிருந்து சுயேச்சைக் குழுக்களுக்கான பெயர்குறித்த நியமனப்பத்திரங்கள் குறித்த தெரிவத்தாட்சி அலுவலரிடம் கையளிக்க முன்னரான காலப்பகுதியினுள் அந்தந்த குழுவினால் பெயர்குறித்து நியமனம் சமர்ப்பிக்கப்படுகின்ற ஒவ்வொரு வேட்பாளர் சார்பாகவும் இரண்டாயிரம் ரூபா வீதம் கணக்கிடப்பட்ட பணத் தொகையொன்றை செல்லுபடியான பணத்தால் தெரிவத்தாட்சி அலுவலரிடம் கிழமையின் கடமை நாட்களில் சாதாரண அலுவலகக் காலப்பகுதியினுள் வைப்பிலிடுதல் வேண்டும். 2024, செத்தெம்பர் மாதம் 28 ஆம், 29 ஆந் திகதிகளிலும், 2024, ஒற்றோபர் 05 ஆம், 06 ஆம் திகதிகளிலும் வைப்புப் பணம் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

04. வைப்புப் பணம் கையேற்பதற்குத் தேவையான ஏற்பாடுகள், குறிப்பிட்ட மாவட்டச் செயலகத்தில் அல்லது மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

05. பெயர்குறித்த நியமன பத்திரங்கள் கையேற்றல் நடவடிக்கைகள் 2024, ஒற்றோபர் மாதம் 05 ஆம், 06 ஆம் திகதிகளில் இடம்பெற மாட்டாது.

**ஆர். எம். ஏ. எல். ரத்நாயக்க**,
தவிசாளர்,
தேர்தல் ஆணைக்குழு.

**எம். ஏ. பீ. சீ. பெரேரா**,
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

**அமீர் பாயிஸ்**,
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

**ஏ. சண்முகநாதன்**,
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

பேராசிரியர் **லக்ஷ்மன் திசாநாயக்க**,
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

தேர்தல் ஆணைக்குழு,
தேர்தல் ஆணைக்குழு அலுவலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
2024, செத்தெம்பர் 25.

EOG 09-0189